பார்த்திவஹு
ஆவணி-புரட்டாசி மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 4
ஸஞ்சிகை - 9

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

பக்கம்

விஷய ஸூசிகை :—1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்... 99
2. ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம் 102
3. திருமலையின் சிறப்பு 105
4. அகோபில மால் 108
5. குறட் பாக்கள் 111
6. செய்திகள் 113
7. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 115

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[ஐந்தாம் அங்கம்]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 8, பக்கம் 86-ன் தொடர்ச்சி.]

தார்ப்பன் :—[முன் நோக்கிக்கொண்டு] என்னுடைய சிஷ்யர் எத்தனை பேர் உளர்! அவர்களுள் சிலர் வேதத்தைத் தள்ளினவர்; சிலர் வேதத்தை ஒப்ப[illegible] அதற்கு விபரீதப் பொருள் உரைப்பவர். வித்வக் கூட்டங்கள் [illegible]க்கொண்டேயிருக்கையில், மஹாமேரு உட்படத் தங்கள் [illegible] இல்லையென்று ஸாதிக்கவல்லவர். அவர்கள் புத்தியை [illegible]யும் மாய யுக்திகளால் ஏமாற்றி, கண்ணுள்ளாரைப் [illegible]ம், செவியுள்ளாரைச் செவிடர் போலும், புத்தியுடை[illegible]வும் ஆக்கிவிடுகிறார்கள். [கண்ணால் காணும் பொருள் [illegible]ப்படுவதில்லை' யென்று பேசச்செய்வதால், கண்ணுள்ளா

JL
210140

ரையும் குருடரைப்போல் ஆக்குகிறார்கள்; செவியுள்ளாரையும் செவிடரைப்போலச் செய்துவிடுகிறார்கள் என்றபடி.] எதிரிகளை வாய்மூடச் செய்வதுதானே சிறந்தது. ப்ரமாணங்களை ஏன் விரித்து நிரூபணம் செய்ய வேணும்? ஜயித்து அடக்கவேண்டியதுதானே. எதிரிகள் புத்தியை மயக்கி நம் வசப்படுத்தி ஏமாற்றி விடுவதுதான் நலம். மணி மந்த்ர ஔஷதங்களால் புத்தியை மயக்கி உலகத்தை என் வசமாக்கிக் கொள்ளுகிறேன். [ஒருவன் பேசுவதுபோலும் ஒருவன் அதைக் கேட்பதுபோலும் நடிக்கிறான்] 'என்ன சொல்லுகிறான்? ப்ரத்யக்ஷ ப்ரமாணங்கள் ஸுப்ரதிஷ்டிதமாக ஸாதிப்பதை, எப்படி திருடரைப்போல் கொள்ளையிட்டு அபஹரித்துக் காட்சி ப்ரமாணத்தையே இல்லை செய்யக்கூடு மென்று கேட்கிறான்?' [ரோஷத்துடனும் அஹங்காரத்துடனும் உரக்கப் பேசுகிறான்.] "அடே! பார்ப்பாரப் பயலே! பாரடா; ஆகாயத்தில் கண்ணார எல்லாரும் காணும் கருமையை, உங்கள் வைதிக சாஸ்த்ரிகள் பொய்யென்று ஸாதிக்கவில்லையோ? அறு சமயங்களால் என்ன பயன்? அவற்றில் நம்பிக்கையுள்ளவர் ஒப்பினதால் மட்டும் அவை ப்ரமாண மாகுமோ? காட்சிப் பொருள்க ளெல்லாம் ஒருநிலையிலிருப்பவை யென்பதே, யுக்தி வாதங்களாலும் வாதிகள் கலஹங்களாலும் ஸந்தேஹத்திற்கு இடமாகி நம்பிக்கை யில்லாமற் போய்விட்டது. நான் சொல்லிக்கொடுத்திருக்கும் யுக்தி வழிகளால் 2, 3 கக்ஷிக் கோடிகளிலும் அசைக்கமுடியாத பலத்தையுடைய என் ஸித்தாந்த பேதங்களை என் சிஷ்யர்கள் ஸ்தாபிக்கட்டும்.'' [வேத விரோதியான ஏதாவது ஒரு மதத்தை ஆஶ்ரயித்தால் போதும். இந்த மஹாமோஹ சிஷ்யனுக்குப் பாஹ்ய மதங்கள் என்றதைத் தான் தன் மதமென்று இவன் பாராட்டுவதில்லை.]

[வலது பக்கம் திரும்பி] "இதோ மகத களிங்க தெலுங்கு த்ரமிட கர்நாட கேரள கொங்கண தேசங்கள். போதி வ்ருக்ஷத்தின் அடியிலே உட்கார்ந்து, 48 பௌத்த மத பேதங்களை நீச ப்ராக்ருத பாஷைகளில் வேடிக்கையாய் நிர்மாணம் செய்து, வைதிகர்களின் வித்யா தர்ப்பத்தை அபஹரித்தேன்'' [தர்ப்பன், 'பிறர் தர்ப்ப குணத்தை அழிக்கிறேன்' என்கிறான். தான் தர்ப்பனாயிருந்தும், பிறர் தர்ப்பத்தை யறியாமல் அதை அழிக்க முயல்வது தர்ப்பத்தின் ஸ்வபாவ மென்று காட்டப்படுகிறது. யதிராஜ ஸப்ததியில் "ஊர்த்வம் நிவிஷ்டஸதாம் நியந்த்ராணாம்'' என்கிற ஶ்லோகத்தை இங்கே நினைக்கவேணும். [மஹத்தான வேத வ்ருக்ஷங்களின் மூலத்தில் அநேகர் தண்டதரராய் உட்கார்ந்துகொண்டு, வேதார்த்தங்களை விபரீதமாய் உரைத்துக்கொண்டு, வேதங்களுக்கே ப்ரதாரண பயத்தை உண்டுபண்ணுபவரும், ப்ரத்யக்ஷ ப்ரமாண ஸித்தமான காணும் பொருள்களையே பட்டப் பகலில் கவர்பவருமான ப்ரதாரகர் (திருடர்) பயத்தைப் போக்கினார்] என்று அங்கே எம்பெருமானாரைப் புகழ்ந்துள்ளது. அங்கே "ஸதாம் நியந்த்ராணாம் ஊர்த்வம்'' என்றதால், "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்'' என்று ஓதும் மஹோபநிஷத்தைக் குறிப்பதாக ஒரு பொருள். 'ஒன்றுந் தேவில்' பரத்வ நிர்ணயத்தில் ஆழ்வார் அந்த மஹோபநிஷத்தையே முதலில் எடுத்தார் 'வேதங்களின் மூலத்தில்' என்றதால், 'மூலவேதமான ஏகாயந சாகையின் அடியில்' என்று மற்றொரு பொருள். அந்த மூலவேதம் ஸ்ரீ பாஞ்சராத்ரத்திற்கு மூல மென்பர்.]

"என் சிஷ்யர்கள் ஸப்த த்வீபங்கள் அடங்கிய பார் முழுவதும் ஜய த்வஜ ஸ்தம்பங்களை நாட்டட்டும்.''

[முகத்தைத் திருப்பி மற்றொரு திக்கைப் பார்த்துக்கொண்டு] "இந்தத் தேசங்கள், யவநர் ம்லேச்சர் முதலியவரால் பீடிக்கப்பட்டவை. இங்கே சிலர் கமுக்கட்டைகளில் ஓலைச்சுவடிகளைத் தொங்கவிட்டுக்கொண்டு, முகத்திலிருந்து கூர்ச்ச பாரங்கள் (தாடிகள்) தொங்க, அல்ப ஞானத்தால் மதங்கொண்டவராய்,

பெரியோரை நிந்தித்துக்கொண்டு, அபிநயங்களாலும் விரல் ஆட்டங்களாலும் ஆடம்பரம் செய்துகொண்டு, ராஜ மந்த்ரி குரு ஸ்தானங்களை வஹிக்கிறார்கள். இவர்களுக்கு என்ன ஸாரமுளது?''

[வடக்குத் திக்கை நோக்கி] இதோ இங்கே ஒருவன் காஸ்மீரத்திலிருந்தோ ஜலந்தரத்தி லிருந்தோ தெற்கே வருகிறான். இவனை, 'என் ப்ரிய பத்நிகளான ஈர்ஷ்யை அஸூயை இவர்களின் தற்போது ஸமாசாரத்தை யறிவையோ?' என்று கேட்கிறேன். இப்படிச் சொல்லிக்கொண்டு அவனைக் கேட்டதற்கு அவர்கள், மைத்ரீ கருணை முதிதை உபேக்ஷை என்றும், ஸுமதி தேவி தோழிகளின் நிவ்ருத்தி யென்னும் ஒரு சுரங்கத்தில் சிறையிடப்பட்டிருப்பதாக அவன் சொல்வதாகச் சொல்லி, அதன்பேரில் கோபங்கொண்டு, 'அது எப்படி ஸம்பவிக்கும்? நீ புளுகுகிறாய்' என்கிறான்.

[பரிஹாஸச் சிரிப்போடு] "தேச காலங்களுக்குத் தக்கபடி என்ன தோஷச் சேர்க்கை! இவன் மாமியார் ஜைந மதத்தைச் சார்ந்தவள்; இவன் ஸம்பந்திகள் பௌத்தர்; இவன் தாயாரும் தகப்பனாரும் பாசுபத மதத்தைத் தழுவினவர்; இவன் குரு காணாத மதம்; இவன் பெண்டாட்டி ஸாங்க்ய யோக மதத்தில் நிற்கிறாள்; இவன் ப்ராண ஸ்நேஹிதன் சார்வாக மதஸ்தன். இவனுக்கு மித்யாசாரனென்று பெயர். இந்தப் பாவியை என்போன்ற மஹாத்மாக்கள் பார்த்தால்கூட தோஷம். இந்தத் தோஷத்தைப் போக்க ஸூர்யனை யாவது என்னையாவது பார்த்துக்கொள்ளுகிறேன்."

[ஈர்ஷ்யை என்பது பிறர் உயர்வைப் பொறாமை. அஸூயை என்பது, பிறர் குணங்களையே தோஷங்களாகக் க்ரஹிப்பதும் கவனிப்பதும் காட்டுவதுமாகும். தோழரின் ஸுகத்தைப் பார்த்து உகப்பது மைத்ரீ. அதைக் கண்டு பொறாமைப்படுவது ஈர்ஷ்யை. துக்கப்பட்டவரைப் பார்த்து, 'இவர்கள் துக்கம் எப்படித் தீரும்!' என்று நினைப்பதும் பார்ப்பதும் கருணை. அவர்கள் துக்கத்தைப் பார்த்து உபேக்ஷையும் கூடாது, ஹர்ஷமும் கூடாது. புண்யவான்களுடைய பாக்யங்களைக் கண்டு, இது யுக்தமென்று ஹர்ஷப்படுவது முதிதை. புண்ய மற்றவரிடம் உதாஸீநமாயிருப்பது உபேக்ஷை. அவர்களை அநுமோதநமும் செய்யக்கூடாது, த்வேஷிக்கவும் கூடாது. 'ஸுகப்படுபவர், துக்கப்படுபவர், புண்யவான்களான பாக்யசாலிகள், புண்யமற்றவர், ஆகிய இவர்கள் விஷயங்களில், முறையே மைத்ரீ, கருணை, முதிதா, உபேக்ஷா என்று சித்த வ்ருத்திகளையே பயிற்சி செய்வதால் சித்தத்தைத் தெளியச் செய்யவேணும்' என்று யோகஸூத்ரம். ஈர்ஷ்யை அஸூயை என்னும் குணங்களை இதே குணங்கள் அடக்கும். அதனால், இந்தப் பெண் குணங்களாகிய ஸுமதி ஸகிகளால் ஈர்ஷ்யையும் அஸூயையும் சிறையிடப்பட்டதாகக் கூறியது, ஒரே குடும்பத்தில் உள்ளவர் தங்கள் தங்கள் இஷ்டப்படி வெவ்வேறு மதங்களைத் தழுவியவராயிருப்பது உண்டென்று காட்டுகிறது. ஸூர்யனைப் பார்த்தால் சுத்தியென்பர். இந்த அஹங்காரி ஸூர்யனுக்கு மேற்பட்டவனாகத் தன்னையெண்ணிக்கொண்டு, ஸூர்யனுக்குப் பதிலாய்த் தன்னையே பார்த்துக்கொண்டு, தன் அசுத்தியைப் போக்கிக்கொள்ளுவதாகச் சொல்லுகிறான். ஸூர்யனுக்கு எப்படி அசுத்தி வாராதோ, அப்படியே ஸூர்யனைப்போல் தேஜஸ்வியான தனக்கு அசுத்தியே வாராமலிருக்க வேண்டுமே யென்பதை மறந்து, தனக்கு வந்த அசுத்தியைத் தன் தர்சநத்தினாலேயே நீக்கிக்கொள்வதாகப் பேசுகிறான்.]

[வேகமாய் நடந்து] "இதோ இங்கே மஹாநதிகளான கங்கா யமுனைகளின் நடுதேசங்கள். இங்கே ப்ருஹஸ்பதியை அதிசயித்த புத்தியுடையவர் பல ஸித்தாந்தங்களைக் கதம்பமாகக் கலந்துகொண்டு, நம்மவர் மதோபந்யாஸம் செய்வதைக் கேட்டால், பரமசிவர்களிடம் வரம் பெற்றவர்கூட அறிந்து

கொள்ளவே முடியாதே. அறியவே அறியாதபோது, அதை அநுமாநம் செய்து பதில் கூறுவதற்கு ப்ரஸக்தி எங்கே? காசி முதலியவை முக்தி க்ஷேத்ரங்களென்று தெரிந்த எம்மரசர் மஹா மோஹர். மேல் தேசங்களிலிருந்து ம்லேச்ச அரசர்களை இங்கே வரவழைத்து இந்தத் தேசங்களை தாறுமாறாக ஆக்கியிருக்கிறார்கள்.”

[பல மதங்களிலிருந்து ஓரோர் விஷயத்தைப் பிச்சை வாங்கி எல்லாவற்றையும் ஒட்டுப்போட்டு ஒரு மதத்தைக் கல்பனை செய்துகொண்டு, அதை ஜநங்களுக்கு அறியக்கூடாத பரிபாஷைகளில் சொல்லிக்கொண்டு உபந்யாஸம் செய்து அவர்களை ஏமாற்றி வசப்படுத்துகிறார்கள். இவர்கள் இன்ன பேசுகிறார்களென்று கேட்பவர்க்கு விள்ளாவிடினும், இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களைக் கண்டு இவர்கள் மிகப் படித்தவரென்று மயங்கி இவர்களை வணங்குகிறார்கள். ‘உபந்யாஸம்’ என்கிற பதத்தினால், ‘சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் சொல்லும் முறையை விட்டு, அந்தக் காலத்திலேயே மத ரஹஸ்யங்களை ப்ரஸங்கமாக உபந்யாஸிக்க ஆரம்பித்து விட்டார்கள்’ என்பதை ஸ்வாமி வேடிக்கையாகக் காட்டுகிறார். காசி முதலிய ப்ரதாநமான க்ஷேத்ரங்களே பிறரால் ஆக்ரமிக்கப்பட்டுத் தாறுமாறாகப் போனதைக் கண்டு, மஹாமோஹ படர்களுக்கு மிகக் களிப்பு. ப்ரபோத சந்த்ரோதயத்தில், இரண்டாவது அங்கத்தின் தொடக்கத்தில், கங்கைக் கரையில் காசி க்ஷேத்ரத்தில் டம்பன், அந்த க்ஷேத்ரத்தில் டாம்பிகமாய் வைதிக வேஷம்போடும் பற்றுடைய துர்வ்ருத்தங்களையும் மேல் வேஷத்தால் ஶ்ரத்தாளுவான ஜநங்களை ஏமாற்றுவதையும் கண்டு ஆஶ்சர்யப்படுகிறான். அந்த ரீதியில் இங்கே தர்ப்பன் பேச்சுக்கள்.]

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

(ஸம்புடம் 4 ; ஸஞ்சிகை 8 ; பக்கம் 89-ன் தொடர்ச்சி)

8. மைத்தகுமா மலர்க்குழலாய் வைதேவீ விண்ணப்பம்
ஒத்தபுகழ் வானரக்கோன் உடனிருந்து நினைத்தேட
அத்தகுசீர் அயோத்தியர்கோன் அடையாளமிவைமொழிந்தான்
இத்தகையால் அடையாளம் ஈதவன்கை மோதிரமே.

“சுருண்டு இருண்ட கூந்தலையுடைய தேவியே! பர்த்தாவைப் பிரிந்த துக்கம் தீரும் காலம் நெருங்கியது. ரகுகுல திலகன், கபந்தன் வாக்யத்தால் ஸுக்ரீவ மஹாராஜருடைய புகழைக் கேட்டு அவரைத் தேடிவந்து, அக்நி ஸாக்ஷியாய் அவரிடம் தோழமை கொண்டார். பெருமாளுடைய ஸுக துக்கங்களைத் தம்மதாகவே பாவிக்கும் தன்மையுடையவர் எங்கள் மஹாராஜா. ஸ்ரீ ராகவன் வாலியைக் கொன்று வாநர ராஜ்யத்தை ஸுக்ரீவருக்குக் கொடுத்து முடிசூட்டினார். கோடிக்கணக்கான வாநர வீரர்கள் கூட்டங்கூட்டமாகத் தங்களைத் தேடத் திக்குக்கள் தோறும் சென்றிருக்கின்றனர். ஏதோ ஒரு ஸுக்ருத விசேஷத்தினால் என்னை ஒரு பொருட்டாக அபிமானித்துத் தென்திசைக்கு அனுப்பினார் ஸ்வாமி. பகவத் பத கமலங்களையே த்யானித்துக்கொண்டிருக்கும் மஹாங்கள் பவக்கடலை ஸுலபமாய்த் தாண்டுவது போல், ‘இதோ பாருங்கள் ராமநாமம் எழுதியுள்ள அவன் திருக்கைத் திவ்ய

மோதிரம்; இதன் அளவில்லா மஹிமையினால் இவ்வற்பமாகிய உவர்க் கடலைத் தாண்டி வந்தேன்; இது ஒரு வியப்போ?'

["वानरोऽहं महाभागे दूतो रामस्य धीमतः।
रामनामाङ्कितं चेदं पश्य देव्यङ्गलीयकम्॥"]

என்று கணையாழியைக் காண்பித்தார். கண்டாள் தேவி; கொண்டாள் ஆநந்தம். தூர தேசத்திலிருந்து வந்த ஆப்த பந்துக்களைக் கண்டாற்போல் ஓடிவந்து கணையாழியை எடுத்துக்கொண்டாள். கண் இமைக்காமல் கடாக்ஷித்தாள். உள்ளம் குளிர்ந்தாள். உடல் பூரித்தாள். வெயிலால் வாடிய பயிருக்கு ஒரு பாட்டம் மழை பெய்தாற்போல் அவள் திருமுகம் மலர்ந்து ப்ரகாசித்தது.

9. திக்குநிறை புகழாளன் தீவேள்விச் சென்றநாள்
மிக்கபெரும் சவைநடுவே வில்லிறுத்தான் மோதிரம்கண்டு
ஒக்குமால் அடையாளம் அனுமானென் றுச்சிமேல்
வைத்துக்கொண் டுகந்தனளால் மலர்க்குழலாள் சீதையுமே.

அப்பொழுது ஸீதாதேவியின் மனக் கண்களின் முன், பத்துத் திக்கிலும் பரந்த கீர்த்தியையுடைய ஜநக மஹாராஜன் யாகத்தில் கௌஶிக முனிவருடன் சக்ரவர்த்தித் திருமகன் எழுந்தருளியிருந்ததும், மஹத்தான ஸபையில் கந்யாசுல்கமாகிய சிவ தநுஸ்ஸை விளையாட்டாக ஒடித்துத் தன்னை மணந்துகொண்டதுமான காட்சிகள் தென்பட்டன. 'ராமபிரான் தனது செந்தாமரைக் கைகளால் என் கைகளைப் பற்றியபொழுது உறுத்திய இக் கணையாழி, இப்பொழுதும் பிரிந்த எங்களை மறுபடியும் சேர்த்து வைக்க வந்ததோ?' என்றெண்ணி மகிழ்ந்தாள். 'அப்பா! ஹநுமானே! உன் புத்தி அபாரம். உன்னைப் போன்ற மேதாவி உலகில் பிறந்ததுமில்லை; பிறக்கப் போவதுமில்லை. மரணத் தறுவாயில் இருக்கும் எனக்கு அம்ருத ஸஞ்ஜீவினியைக் கொடுத்து உதவினாய். உன்னை என்னவென்று கொண்டாடுவது? இவ் வடையாளத்துக்கு நிகர் இவ்வுலகில் எதுதான் உண்டு? இக் கணையாழியைக் கண்டதும், இக் கணையாழியை அணியும் விரலும், பெருமாள் திருக்கையும், அவருடைய தோளும், திவ்ய திருமேனியும் என் கண்கள் முன் காட்சியளிக்கின்றன' என்று உகந்தாள். அதை ஶிரஸா தரித்தாள்.

ஆநந்தாதிஶயத்தினால் மெய்ம்மறந்து நிற்கும் தேவியைப் பார்த்து ஸ்ரீராம தூதன் தாமும் சிரமேற் கைகூப்பினார். அவரது ஆநந்தத்திற்குக் கரையே இல்லை. 'நானே தந்யன்! எனக்கு இத்தகைய கைங்கர்யம் செய்யும் பாக்யம் கிடைத்ததே! இதுவும் பகவத் க்ருபைதான். மற்ற கார்யங்களையும் அவனே தான் பூர்த்தி செய்து வைக்க வேண்டும்' என்றெண்ணி த்யானித்தார்.

["गृहीत्वा प्रेक्षमाणा सा भर्तुः करविभूषणम्।
भर्तारमिव संप्राप्ता जानकी मुदिताऽभवत्॥"]

10. வாராரும் முலைமடவாள் வைதேவி தனைக்கண்டு
சீராரும் திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம்
பாராரும் புகழப்புதுவைப் பட்டர்பிரான் பாடல்வல்லார்
ஏராரும் வைகுந்தத் திமையவரோ டிருப்பாரே.

வேதம் ஒருவராலும் செய்யப்படாதது; ஆதியந்த மற்றது. அது பரம புருஷனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய சரித்ரங்களையும் முறையிடுகின்றது. அதன் கருத்தையே ரிஷிகள் ஸ்ரீமத் ராமாயணம் மஹாபாரதம் ஸ்ரீ பாகவதம் முதலிய இதிஹாஸ புராணங்களில் அமைத்தார்கள். ஒரு

ஸமயம் வேதத்திற்கு ஆபத்து நேரிட்டது. புராணங்களுக்கும் அவமானம் உண்டாகியது. அத்தருணம் உலகத்தில் ஞானம் என்னும் ஒளி மறைந்தது. எங்கும் அஞ்ஞானமாகிற அந்தகாரம் சூழ்ந்தது. இரவில் ஸஞ்சரிக்கிற மாயாவாதிகளாகிற அரக்கர்கள் நிர்ப்பயமாய் ஸஞ்சரித்தார்கள். அப்பொழுது ஆழ்வார்கள் ஸூர்யோதயம்போல் அவதரித்தார்கள். அவர்கள் செய்த உபகாரம் அநந்தம்; அத்புதம். வேதத்தை ஸ்த்ரீ சூத்ரர்கள் ஓத அதிகாரமில்லை என்று சாஸ்த்ரம் கூறுகிறது. அதை விலக்க ஆழ்வார்கள் செய்த உபாயம் அத்யாஸ்சர்யம். அம் மஹான்கள் கருணைக்கு உறைவிடம். பாமர உலகம் கடைத்தேறுவதன் பொருட்டே அவர்கள் வேதத்தைத் தமிழாகச் செய்தார்கள். கரும்பு போன்ற நான்மறைகள், நாலாயிரம் கற்கண்டுக் கட்டிகளாய்த் திவ்ய ப்ரபந்தமென்னும் வடிவமெடுத்தது. அது பக்தி ப்ரவாஹமென்கிற பாலாறும் தேனாறுமாய்ப் பாய்ந்தோடி உலகிற்கு நன்மை யளிக்கின்றது. மிகவும் பெருமை தாங்கிய பெரிய திருவடியின் அவதாரமாகிய பெரியாழ்வார், ஸ்ரீ ராமாவதாரத்தில் அத்யந்தம் புகழடைந்த சிறிய திருவடியின் பாவமடைந்து ஸீதாதேவியை அசோக வநத்தில் தேற்றிய இத் திவ்ய சரித்ரத்தால், "ஸ்ரீமந் நாராயணனே பர தேவதை; அவனே சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தான்; உலகில் அசையும் பொருள்கள் அசையாப் பொருள்கள் அனைத்திற்கும் அவனே சரீரம்; அவனே ரக்ஷிக்க வல்லவன்; அவ் வெம்பெருமான் திருவடித் தாமரைகளை அடைந்து அவனுக்குக் கைங்கர்யம் புரிவதே புருஷார்த்தம்; அவைகளைக் கிட்டுவதற்கு மார்க்கம் அவன் பத கமலங்களில் சரணாகதி செய்தலைத் தவிர வேறில்லை; அதற்கு ஆசார்ய கடாக்ஷம் அத்யாவஶ்யம்; சரணாகத ரக்ஷகன் ஸ்ரீராமபிரான்; அவன் நாம் செய்யும் அபராதங்களைப் பொருட்படுத்தான்; ஆசார்யனை முன்னிட்டு அவன் திருவடித் தாமரைகளை ஆஶ்ரயிங்கள்" என்ற ரஹஸ்யங்களை வெளியிட்டருளினார். அத்தகைய மஹிமையும் பெருமையும் வாய்ந்த இப் பாசுரங்களைப் பக்தி ஶ்ரத்தையுடன் பாடும் பாக்யசாலிகள், வைகுண்டத்தில் நித்ய ஸூரிகளுடன் சேர்ந்து பகவானுக்குக் கைங்கர்யம் செய்து தம் நித்யாநந்தத்தை அடைவார்கள்.

[முற்றிற்று]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவ ௵ புரட்டாசி ௴

1௳	திங்கட்கிழமை	—	கந்யா ஶுக்ல ஏகாதசி திதி.
2௳	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி வ்ரதம். த்வாதஶி திதி.
6௳	சனிக்கிழமை	—	மஹாலய ஆரம்பம்.
10௳	புதன்கிழமை	—	பஞ்சமி-ஷஷ்டி திதி த்வயம்.
11௳	வியாழக்கிழமை	—	ஸப்தமி திதி.
12௳	வெள்ளிக்கிழமை	—	அஷ்டமி திதி; மத்யாஷ்டமி
16௳	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதஶி வ்ரதம்
19௳	வெள்ளிக்கிழமை	—	மஹாலய அமாவாஸ்யை
20௳	சனிக்கிழமை	—	ப்ரதமை திதி.
21௳	ஞாயிற்றுக்கிழமை	—	நவராத்ரி ஆரம்பம்; த்விதீயை திதி.
22௳	திங்கட்கிழமை	—	அதிதி
23௳	செவ்வாய்க்கிழமை	—	த்ருதீயை திதி
25௳	வியாழக்கிழமை	—	ஸ்ரீமதாதி வண் ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
29௳	திங்கட்கிழமை	—	மஹா நவமி; ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் திரு நக்ஷத்ரம்.
30௳	செவ்வாய்க்கிழமை	—	கந்யா சுக்ல தசமி திதி; விஜய தஶமீ.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருமலையின் சிறப்பு

—

[சிறுங்கட்டூர் ஸ்ரீ உப. S. N. ஸ்ரீராம தேசிக சிரோமணி,
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி]

ரங்குவும் ராஜுவும் இளமையிலிருந்து ப்ரிய நண்பர்கள். இவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை. ரங்குவுக்குச் சுமார் இருபது வயது இருக்கும். ராஜு என்பான் ரங்குவைவிட வயதிற் சிறியவன். இவர்களின் உடல் அமைப்பையும் நட்புரிமையையும் கண்டோர், இவர்களை உடன் பிறந்தவர்கள் என்றே கருதினர். இவர்களைக் கண்ட ஆடவரின் மனமே அபஹரிக்கப்படுமெனின், அவர்களின் அழகின் தன்மை கூறத்தக்கதன்று. ரங்கு என்பான் கடவுளிடத்துப் பக்தியுடையவன். எப்பொழுதும் அத்தூயோனின் உயர்வற்ற உயர்நலத்தைக் கருதி மனமுருகி ஆனந்த நீரைப் பெருக்குவான். மலராள் மணவாளனின் திருநாமங்களைப் பேசுவதே இவன் இயல்பாய் இருந்து வந்தது. பெரியோரின் உபந்யாஸங்கள் புராண ப்ரவசநங்கள் முதலியவை நடைபெறுமிடங்களில் ரங்குவைத் தவறாமற் காணலாம். பகவத் பக்தி மேலீட்டின் அடியாக இவன் செயல்கள் பலவற்றைக் கண்டபலர், இவனைப் ‘பித்துப் பிடித்தவன்’ என நினைப்பதுமுண்டு. இவன் கோயில்கட்குச் சென்று அர்ச்சா மூர்த்திகளைக் கண்டு களிக்கும்போது, எல்லாம் வல்ல அவனுடைய ஸுலபத் தன்மை, உயிர்களிடத்துள்ள தயை, முதலிய அரிய குணங்கள் இவன் நினைவுக்கு வரும். தவிர: இவன் பூர்வாசார்யர்களிடத்தும் அவர்களின் ஸ்ரீஸூக்திகளிடத்தும் மிக்க நம்பிக்கையுடையவன். அவர்கள் நமக்குப் புரிந்த நன்மைகளை நினைந்து நினைந்து கண்ணீர் விடுவான். மேலும் தேசிக வள்ளலிடம் இவன் கொண்ட பக்தி அபாரமானது. எப்பொழுதும் தூப்புல் வள்ளலின் ஸ்ரீஸூக்திகளை வாயாரப் பாடி மகிழ்வான். ‘தேசிக வள்ளல் ஸாதிக்கும் விஷயங்களனைத்தும் எக்காலத்தும் பொய்யாகாது’ என்பதே அவன் நோக்கம். இவனுக்குத் ‘தேசிக பித்தன்’ எனும் பெயருமுண்டு. தயா சதகம் கோபால விம்சதி முதலிய தேசிக ஸ்தோத்ரங்களை வாயாரப் பாடி, அதன் காரணமாக அவன் தன்னை மறந்து செய்யும் செயல்களால் ‘தேசிக பித்தன்’ எனும் பெயரும் அவனுக்கு மிகப் பொருத்தமுடையதாயிற்று. இனி ராஜுவின் தன்மையைச் சற்றுக் கவனிப்போம்.

ராஜுவுக்குப் பகவானிடத்தில் பக்தி ஓர் அணுவளவும் கிடையாது. பெரியோர்களை ‘வெறும் வேஷதாரிகள்’ எனச் சொல்லி நகைப்பான். இவன் கோயில்கட்குப் போகாததுமன்றி, அங்குச் செல்வோரைத் தூஷணமாகவும் பேசுவான். வைதிகர்களையோ அல்லது அவர்களுடைய ஆசாரங்களையோ கண்டால் ரங்குவுக்கு மிக்க கோபம் வரும். பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளெல்லாம் தவறான பொருள்களையே கூறுகின்றன என்றும், கேவலம் மதக் கட்டுப்பாட்டின் பொருட்டே அனைவரும் அவற்றை ஆதரிக்கின்றனர் என்றும் இவ்வாறாக இவன் நாஸ்திகவாதம் செய்வான். “ஸர்வேச்வரனைவிட பிராட்டி உயிர்களிடம் மிகுந்த கருணையுடையவள்; ஜீவன்களைக் கரையேற்றுவதிலேயே கண்ணுங் கருத்துங் கொண்டவள்; மிகுந்த பாபம் செய்யும் ஜீவன்களையும் கேவலம் சரணாகதி என்னும் உபாயத்தால் பிராட்டியின் மனம் கோணாமல் இருப்பதற்காகத் தன் வசம் ஸர்வேச்வரன் சேர்த்துக்கொள்ளுகிறான்” எனத் தேசிகாதிகள் ஸ்ரீஸூக்திகள் மூலம் உரைப்பது எள்ளளவும் சரியன்று என்றெல்லாம் ரங்குவினிடம் இவன் கூறுவதுண்டு. இவை ரங்குவுக்கு நாராசமாய்

இருக்கும். இவனுக்கு ஸம்ப்ரதாயத்தில் நம்பிக்கை உண்டாகுமாறு செய்த ரங்குவின் உபதேசங்கள் யாவும், காட்டில் காய்ந்த நிலாப்போல் வீணாயின. என்ன உபதேசம் செய்தும் தான் என்ன! ஜன்மாந்தர கர்ம வசத்தால் ஸர்வேஶ்வரன் கொடுத்த மனத்தை மாற்ற வல்லவன் யாவன்? எனினும் ஸர்வேஶ்வரனுடைய க்ருபையால் நாளடைவில் ஸம்ப்ரதாயத்தில் ஊக்கம் உண்டாகும் என்பது மட்டும் ரங்குவுக்குத் தோன்றுவதுண்டு. இவ்விருவர்க்கும் இவ்வாறு அபிப்ராய பேதம் உண்டானாலும், பரமனின் க்ருபையால் இவர்களுக்குள்ள நட்பு மட்டும் சிறிதும் கலையாமல் இருந்து வந்தது. 'ஸம்ஸாரத்தில் கிடந்து வருந்தும் ஜீவன்களுக்கு ஆசார்ய ஸம்பந்தத்தை யளிப்பது போல், ராஜூவின் மனநிலையை மாற்றி இவனைக் காப்பாற்றும் பொருட்டே பரமன் இவனுக்கு ரங்குவோடு நட்பைக் கொடுத்தானோ!' என்று எண்ண வேண்டி யிருந்தது. ஶ்ரிய:பதியின் விருப்பமும், குறித்த காலம் வந்தபின் அல்லவோ பலமுடைய தாகின்றது! இவ்வாறே பல நாட்கள் செல்ல, வழக்கம் போல் ஒரு நாள் மாலையில் இருவரும் உல்லாஸமாகத் திருமலையின் அடிவாரத்தை யடைந்து ஒரு பாறையின் மேல் அமர்ந்தனர். இயற்கை அழகையும் வஸந்தகால சோபையையும் கண்ட ரங்கு, ஸர்வேஶ்வரனின் விசித்ர ஸ்ருஷ்டியை வெகு அழகாக எடுத்து உரைக்கலானான். ஸ்ரீதேசிகன் தயாசதகத்தில் ஸாதித்த திருமலையின் மஹிமை, தயாதேவியின் உபகார விசேஷங்கள், திருமலை வாஸத்தின் மஹிமை, முதலிய பல விஷயங்கள் ரங்குவின் நினைவிற்கு வந்தன. இவனுக்கு ஆநந்தம் தாங்கவில்லை. தயாசதகத்தை வாயாரப் பாடினான். இவனுடைய செயல்கள் முற்றிலும் ராஜூவுக்குப் பிடிக்கவில்லை. வழக்கம்போல் ராஜூவும் தனது நாஸ்திகவாதத்தை விடவில்லை. இவ்விதமே வாதம் செய்து திருமலைச் சார்பாகவே இருவரும் சிறிது தூரம் நடந்து சென்றனர். நடுவழியில் மரத்தடியில், வ்யாதியால் பீடிக்கப்பட்டு மரணத் தறுவாயில் இருக்கும் ஒருவனைக் கண்டான் ரங்கு. அவன் ஜாதியில் வேட்டுவன். பன்னாட்களாகத் திருமலையில் வாஸம் செய்துவந்தவன். மஹா பாபி. பகவானைத் தர்சிக்கச் செல்வோரை வழிமடக்கி அவர்களின் பொருள்களை அபஹரிப்பதே இவன் தொழிலாக இருந்துவந்தது. ஜீவன்களுக்கு ஹிம்ஸை புரிதலில் தயை யற்றவன். இவன் சுற்றத்தா ரனைவரும் காலவசத்தால் இறந்துவிட்டனர். ஒருநாள், அவன் வியாதியால் வருந்தித் தன்னை ஆதரிப்போ ரின்றிக் கோரவிபத்தில் அகப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்தான். இத்தோற்றம் இவர்கள் மனத்தில் பெருங் கவலையை உண்டாக்கியது. இவர்கள் அவன் அருகிற் சென்று பன்முறை கூப்பிட்டபோதுகூட அவன் உணராம லிருந்தான். இவர்கள் வருந்தி அவ்வாறு நிற்கும்போழ்து, திடீரென அவர்கள் கண்முன் ஓர் ஒளி தோன்றிற்று. ஆ! என்ன ஆஶ்சர்யம்! கண்ணுக் கெட்டியவரை ஒரே ப்ரகாசம்! இவர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவர்கள் கண்முன் இவ்வற்புதக் காட்சி தோன்றியது.

இடம் :—ஸ்ரீவைகுண்டம்; காலம் :—மாலை.

[நாக பரியணையில் பரமன் வீற்றிருக்கிறான். பிராட்டி பரமனின் திருவடிகளைப் பிடித்துக்கொண்டிருக்கிறாள். திவ்யதம்பதிகள் உல்லாஸமாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

பிராட்டி :—[புன்சிரிப்புடன் பரமனை நோக்கி] 'நாதா! ஜீவன்கள் எல்லாம் நம் குழந்தைக ளன்றோ? அவர்களுள் தங்களுக்கு ஏன் பக்ஷபாதம்? எல்லோரையும் ஸமமாக நடத்தினால் என்ன குறைந்துவிடும்?'

பரமன்:—'ப்ரியே! நான் ஜீவன்களிடத்துப் பக்ஷபாதம் காட்டுவதாகத் தெரியவில்லையே. எல்லோரையும் ஒரேவிதமாகத்தானே காத்துவருகின்றேன். அதில் உனக்கு ஏன் ஸந்தேஹம்?'

பிராட்டி :—ப்ரபோ! பாருங்கள் இதோ இரண்டு ஜீவன்கள் இருக்கின்றார்களே. இவர்களுள் ஒருவனுக்கு நல்ல புத்தியையும் ஸம்ப்ரதாயத்தில் விச்வாஸத்தையும், மற்றவனுக்குக் கெட்ட புத்தியையும் நாஸ்திகத்தையும் அளித்தது பக்ஷபாத மன்றோ?'

பரமன் :—'கமலே! ஜந்மாந்தரத்தில் அவரவர்கள் வினையின் பயனாக இப் பிறப்பில் நான் புத்தியை அளித்திருக்கிறேன். ரங்கு என்பவன் நல்வினையின் பயனாக நல்லறிவு உடையவனா யிருக்கின்றான். ராஜு தீவினையின் பயனாகத் தீய புத்தியை உடையவனா யிருக்கின்றான். இவ்விஷயத்தில் என்னால் என்ன செய்ய முடியும்? இதை மாற்றினால் உலகம் என்னைப் பக்ஷபாதம் உடையவன் என்று பழிக்குமே!'

பிராட்டி :—'நாதா! அவ்வாறாகில் இவன் எப்பொழுதும் நாஸ்திகனாகத்தான் இருக்கவேண்டுமோ?'

பரமன் :—'விமலே! பயப்படாதே. கூடிய சீக்ரத்திலேயே இவன் தீவினை தொலைந்து நல்லறிவு பெறப் போகிறான். [இவர்கள் இப்படி உல்லாஸமாகப் பேசிக்கொண்டிருக்கும் ஸமயம் திடீரென ஓர் ஆரவார முண்டாகிறது. தயாதேவி கோபாவேசத்துடன் தோன்றுகிறாள். எங்கும் மௌனம்.]

தயாதேவி :—(மிக பரபரப்புடன் பரமனைப் பார்த்து) 'ப்ரபோ! ப்ரபோ! இதென்ன அந்யாயம்? இப்படியும் நீங்கள் இருப்பது உசிதம்தானா?'

பரமன் :—'தயே! என்ன இவ்வளவு அலங்கோலம்? யாருக்கு என்ன நடந்தது? என்ன இவ்வளவு பதற்றம்? உண்மையைச் சொல்.'

தயாதேவி :—'நாதா! ஒரு ஜீவன் நமது இருப்பிடமான திருமலையின் தாழ்வாரையில் உயிரை இழக்கும் தறுவாயில் இருக்கிறான். அவனைக் காப்பாற்றுவது உங்கள் கடமையல்லவா? அவனைச் சற்றும் கவனியாது இவ்வாறு உல்லாஸமாக இருக்கிறீர்களே? எல்லாவற்றையும் அறிந்த தங்கட்கும் தெரியாத தொன்றுண்டோ?'

பரமன் :—'ப்ரியே! அந்த ஜீவன் பரம பாபி. அவனால் செய்யப்பட்ட பாபங்கள் பல பிறவிகள் எடுத்தும் கழிக்க முடியாதன. இப்படி யிருக்க, இவனை நாம் எப்படிக் காப்பாற்றுவது?'

தயாதேவி :—'நாதா! என்னைச் சரணடைந்தவர்களை ஒருக்காலும் கைவிடுவதில்லை என்று பலதடவைகள் சொல்லியிருக்கிறீர்களே! நம்மைச் சரணடைந்த இவனைக் காப்பாற்றுவதில் என்ன தயக்கம்?'

பரமன் :—'தயே! இவன் நம்மைச் சரணடையாம லிருக்க, நாம் இவனை எவ்வாறு காப்பாற்றுவது?'

தயாதேவி :—ப்ரபோ! அன்று தாங்கள் ராமாவதாரத்தில் அயோத்தியி லுள்ள சராசரம் அனைத்திற்கும் மோக்ஷத்தை அளிக்கவில்லையா? அப்படியே, நம் இருப்பிடமான திருமலைத் தாழ்வரையில் வஸித்துவந்தபடியால் இவனுக்கு மோக்ஷத்தை அளிப்பதில் தவறென்ன?'

பரமன் :—(முகமலர்ந்து) 'தயே! நீ சொல்வது உசிதமே. அப்படியே தந்தோம்; வ்யஸனப்படாதே. உடனே அச்சீவன் சரீரத்தை விட்டகல, அவ்வொளியும் மாயமாய் மறைந்தது. இவ்வற்புதக் காட்சியைக் கண்ட இவர்கட்கு ஒன்றும் தோன்றவில்லை. பரமனின் மஹிமையையும் தயாதேவியின் உபகாரத்தையும் தேசிக ஸ்ரீஸூக்திகளின் உண்மைகளையும் கண்ட இவர்கள் இந்த ஸ்லோகத்தை அநுஸந்தித்தனர்.

"वृषगिरि सविधेषु व्याजतोवासभाजां दुरितकलुषितानां दूयमानादयेत्वम् ।
करणविलयकाले कान्तिशीकस्मृतीनां स्मरयति बहुलीलं माधवं सावधाना ॥"

அன்றுமுதல் ராஜாவின் மனம் மாறிவிட்டது. பகவத் பக்தி, ஆஸ்திக்யம், பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளில் நம்பிக்கை, முதலியவைகள் இவனிடம் குடிகொண்டன. இவனும் ஆஸ்திகனானான். ஸர்வேஸ்வரன் இச்சித்தால் நடவாததும் உண்டோ?

ஸ்ரீ:

அஹோபில மால்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை அய்யங்கார்,
தமிழ் வித்வான், கார்யதர்சி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

வடநாட்டுத் திருப்பதிகள் ஆறிரண்டு. அவற்றுளொன்று அஹோபிலம். சிங்கமாகிய, யாவராலும் விரும்பப்படுகின்ற பேரழகுடைய பெருமான் எழுந்தருளியுள்ள தலமாதலால், இத்திருமலைக்குச் சிங்கவேள் குன்றம் என்று பெயர். திருமங்கையாழ்வார் தமது அறிவுதரும் பெரிய திருமொழியில் 'அங்கண் ஞாலம்' (1-7) என்ற திருப்பதிகச் செஞ்சொன் மாலையால் சிங்கவேள் குன்றுடைய எங்களீச னெம்பெருமானை வணங்கியுள்ளார்.

"அங்கண் ஞாலம் அஞ்சஅங்கோ ராளரியாய் அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்" (1)

[அம்கண் ஞாலம் - அழகிய விசாலமான பூமியிலுள்ளார்; ஆள் அரி - நரசிங்க மூர்த்தி; அவுணன் - இரணியன்; ஆகம் - உடல்; வள் உகிரால் - கூர்மையான நகங்களாலே; போழ்ந்த - இரு பிளவாகப் பிளந்த; புனிதன் - பரம பவித்ரனான எம்பெருமான்.]

"அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய் அவுணன்
கொலைக்கை யாளன் நெஞ்சிடந்த கூருகிராளன்" (2)

[அலைத்த பேழ்வாய் - சீற்றத்தால் நாக்கு அலையா நின்றுள்ள பெரியவாய்; வாள் எயிறு - ஒளி பொருந்திய பற்கள்; கொலை கையாளன் - ஜீவஹிம்சையில் கைகாரனான இரணியன்.]

"ஏய்ந்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய்
வாய்ந்தஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்" (3)

[ஏய்ந்த - தகுதியான; வாய்ந்த - வளர்ந்த; வகிர்ந்த - கிழித்தெறிந்த; அம்மான் - ஸ்வாமி.]

"எவ்வம் வெவ்வேல் பொன்பெயரோன் ஏதலனின்னுயிரை
வவ்விஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்" (4)

[எவ்வம் வெவ்வேல் - துன்பத்தை விளைப்பதான கூரிய வேலாயுதம்; ஏதலன் - பாகவத விரோதி; பொன் பெயரோன் - இரணியன்; வவ்வி - அபகரித்து.]

"மென்ற பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய் அவுணன்
பொன்ற ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்" (5)

[மென்ற - மடித்த; பொன்ற - முடிய.]

"எரிந்த பைங்கணிலங்குபேழ்வாய் எயிற்றோடிதுவெவ் வுருவென்று
இரிந்து வானோர் கலங்கியோட இருந்த அம்மான்" (6)

[எரிந்த - ஜ்வலிக்கின்ற; பைங்கண் - பசுமைதங்கிய கண்கள்; இலங்கு - விளங்காநின்ற; எவ்வுரு - என்ன ரூபம்; இரிந்து - சிதறி; இருந்த - எழுந்தருளியிருந்த.]

"முனைத்த சீற்றம் விண்சுடப்போய் மூவுலகும் பிறவும்
அனைத்தும் அஞ்ச ஆளரியாய் இருந்த அம்மான்" (7)

[முனைத்த சீற்றம் - மிக்க கோபம்; போய் - வளர்ந்து சென்று; விண் - ஆகாயம்; சுட - கொளுத்த; அனைத்தும் - எல்லாம்.]

"நாத்தழும்ப நான்முகனும் ஈசனுமாய் முறையால்
ஏத்தவங்கோ ராளரியாய் இருந்த அம்மான்" (8)

[நா தழும்ப - நாக்குத் தடிக்கும்படி; நான்முகன் - பிரமன்; ஈசன் - சிவன்; முறையால் - கிரமப்படி; ஏத்த - துதிக்க.]

"நல்லநெஞ்சே! நாம்தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந் தோளன்" (9)

[நல்ல - மிகவும் நல்லவன்; நெஞ்சே - மனமே; அல்லிமாதர் புல்க - பெரிய பெரிய பிராட்டியாரை அணைக்க; ஆயிரம் தோளன் - ஆயிரந் திருத்தோள்களை யுடையவன்] எனப் பன்னிப் பன்னி வாயார வாழ்த்துகின்றார் வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் நம் கலியன்.

அழகிய மணவாள தாசர் என்கிற ஐயங்கார் அநுபவம் அந்தாதியில் அமைந்துள்ளது. அப்பாடல் ஈதே:

"வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
சூழ்கருணை யும்முனிவுந் தோன்றியவாற்—கேழ்கிளரு
மங்கவேள் குன்ற வழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு."

[வாழ்குமரன்-பகவதநுக்ரஹம் பெற்ற பிரகலாதாழ்வான்; கனகம் வஞ்சகன்-வஞ்சனைக் குணமுடைய இரணியன்; ஓர் முகம்-ஒருபால்; கருணை-பேரருள்; முனிவு - கடுங்கோபம்; கேழ் கிளரும் - நிறம் விளங்குகின்ற; அங்கம் வேள் - அழகிய அங்கத்தையுடைய மன்மதன்; சரபம் - இரண்டு தலைகளையும் சிறகுகளையும் கூரிய நகமுள்ள எட்டுக் கால்களையும் மேல்நோக்கிய கண்களையுமுடைய தொரு மிருக விசேடம்; பிளந்த - பிளந்து அழித்த.]

இப்பாட்டின் பொழிப்புரை வருமாறு:—

நிறம் விளங்குகின்ற அழகிய தேகத்தையுடைய மன்மதன் சாம்பலாயழியும்படி தனது நெற்றிக் கண்ணைத் திறந்து கோபித்த சிவபிரானது அவதாரமாகிய சரப மென்னும் விலங்கைப் பிளந்து அழித்த சிங்கவேள் குன்றமென்னுந் திருப்பதியில் எழுந்தருளியுள்ள நரசிங்கப்பிரானுக்கு, பகவானது அருள்பெற்று வாழும் பிரகலாதன் என்னும் சிறுவனிடத்து ஒரு பால்நிறைந்த பேரருளும், அவனது தந்தையான வஞ்சனைக் குணமுடைய இரணியன் மீது ஒருங்கே கடுங்கோபமும் உண்டாயின.

பிற்காலக் கவிஞரும் அகோபிலமாலைப் போற்றியுள்ளனர். அவர்களில் செந்தமிழ்த் தென்பாண்டி நாட்டினரும், இத்தாலி நாட்டிலிருந்து கிறிஸ்து மதப் பிரசாரம் செய்வதற்காகத் தமிழ் நாட்டில் வந்து தங்கிய பெஸ்கி என்ற துறவிக்குத் தமிழ் கற்பித்து, அவருக்குப் பல தமிழ் நூல்கள் இயற்றித் தந்து,

அவர் பல தமிழ் நூல்கள் இயற்றத் துணைபுரிந்தவரும் ஆகிய சுப்ரதீபக் கவி ராயர் என்னும் புலவர் பெருமான் தாமியற்றிய கூளப்ப நாய்க்கன் காதல் எனும் பிரபந்தத்தில் அகோபில மாலைக் குறித்துள்ளார். அதனைக் காட்டு கின்றேன்.

"ஆளும் பெருமாள் அகோபிலமால் மெய்யருளெந்
நாளும் பெறும்பெரிய நாயகன்மேற் காதல்சொல (3)
ஏடும் மணிவட்டமும் ஏந்துஞ் சரசுவதியே
ஆடுமயில் ஏறிவரும் ஐயனே முன்னடவாய்." (4)

[அகோபில மாலின் மெய்யருளை எந்நாளும் பெறுகின்ற நாயக்கன் மேற் காதல் சொல சரசுவதியே முன் நடவாய்; ஐயனே முன் நடவாய் என்க. அகோபில மால் - தலைவன் கூளப்ப நாயக்கனுடைய ஊரான நிலக்கோட்டை யில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள திருமால்; அகோபில நரசிம்ம சுவாமி. வடநாட்டிலிருந்து வந்த படைத்தலைவர் அனைவரும் நாய்க்கர். இவர் கள் தாங்கள் வழிபட்டு வந்த அகோபிலத் திருமாலின் திருவுருவத்தைத் தமிழ் நாட்டிலும் பிரதிட்டை செய்வித்தார்கள். மயில் ஏறி வரும் ஐயன் - முருகன்.] இக்கண்ணி யடிகள் கடவுள் வாழ்த்தி லுள்ளன.

"..பெரிய நாகேந்த்ரன்
நீளும் பெருவாழ்வும் நீதிகளு மேலோங்க
ஆளும் புவிபுரக்கு மந்நாளி லேயொருநாள்" (34)

ஆரணஞ்சேர் வையை அருந்தீர்த்தந் தானாடி
நாரணனைத் தாள்போற்றி நாமதீர்த் தம்பருகி" (35)

என்றிசைக்கின்றார் இசைப்புலவர் சுப்ரதீப நாவலர்.

தலைவன் சண்பகப் பூங்கா வகன்று மாசேனைமுன் நடக்கச் சந்தையூரை நோக்கி வருகின்றான்.

"வந்து நவபுரியில் வாழும் அகோபிலமால்
செந்திருவின் பாதமலர் சேவித்துத் தெண்டனிட்டு (280)

தீர்த்தமுடன் மாலைத் திருவடிபெற் றுள்மகிழ்ந்து
வார்த்தை தவறாதகண்டன் மால்யானை மீதேறி" (281)

[நவபுரி - நிலக்கோட்டை; செந்திரு - இலக்குமி; தீர்த்தம் - பிரசாத தீர்த்தம்; மாலை - துளசி முதலிய பிரசாதங்கள்; திருவடி - ஸ்ரீ சடாரி.

என்ற கண்ணிகள் மிகவும் இன்புறற் குரியன.

அநாதிகாலமாக அவ்வப்போது அகோபில மாலை அடியார்கள் போற்றிவந்த பெற்றியைச் சற்றே காட்டினம். இவை போன்றவை பல உள. ஆசாரியனது இன்னருளே கதியென வாளா விருக்கும் யாம், அமயம் உற்றுழி மேலும் வரைகுவம். அகோபில மாலே அன்பர்க் குரியவன். அழகிய சிங்கரே சிற்றுயிர்க் குற்ற பெருந் துணை. வாழ்க அஹோபிலச் சிங்கம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

குறட் பாக்கள்

[ஸ்ரீமதி கௌஸல்யை அம்மாள்]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 8, பக்கம் 95-ன் தொடர்ச்சி]

ஸ்ரீ அழகியசிங்கர் துதி

(1) சீரங்கராசச் சடகோபத் தேசிகன் தாள்
சீருடனே சென்னியே சேர்.

(2) முனிவரரி லிந்திரனை முன்வினைத்தூ ரறுப்பவனைக்
கனிவுறவே கண்ணேநீ காண்.

(3) தீயினாற் சுட்டேநம் தீவினையைத் தூளாக்கித்
தூயோனாய்ச் செய்யும் துணை.

(4) முத்திரை யிட்டுநமை மூலப் பொருளிடத்தே
பத்திரமாய்ச் சேர்ப்பிப்பான் பார்.

(5) வந்தடைந்த சீடர்தமை வாழ்விக்கும் நல்விரதச்
சிந்தையுடை சிங்கனடி சேர்.

(6) சீரங்க ராசன்சீர் சேர்ந்திட்ட சிங்கனடி
நேரடைந்து நெஞ்சே நினை.

(7) பாதகரை மன்னித்துப் பாங்கு பதமீயும்
பாதப்போ தேத்தாய் பரிந்து.

(8) துறவறமே கொண்டு துணையாம் நமக்கே
அறவுருவை நெஞ்சே யடை.

(9) சீரழகு சிங்கன் செய்யவா ராதனமே
பேரதுவாய்க் காணும் பிரான்.

(10) எட்டுடனே நூறுடைய வெம்பெருமான் நற்றொண்டில்
கட்டுண்ட கண்ணனே காண்.

(11) ஓதிநமக் கெட்டெழுத்தை உட்கண் திறந்தளிக்கும்
சோதியுருப் போற்றிச் சுகி.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் துதி

(1) வேங்கடத்து மாமணியோன் வீறு மலர்ப்பதமே
தாங்கல் சிரம்செய் தவம்.

(2) தூப்புல்சீர் வேங்கடத்தான் தூய திருவடியே
காப்பாம் மனமே களி.

(3) தந்திரங்கள் யாவுஞ் சுதந்திரனுய்ப் பெற்றேனே
வந்திக்க வந்திடுநல வாழ்வு.

(4) கவிதார்க் கிகசிங்கன் கண்ணருளே பெற்றேர்
புவியாள்வர் தாமே பொலிந்து.

(5) வேதமுடி கண்ட விமலன்தன் பொற்பதமே
போத மளிக்கும் புகல்.

(6) மாசாகும் பேரிருளே மாய அவனேயே
ஆசானுய் நெஞ்சே யறி.

(7) தேசிகனுய் நம்மைத் திருத்துந் திருவடிக்கே
மாசிலனுய்த் தூவாய் மலர்.

(8) திருவேங் கடநாதன் சீரடியை ஏத்தப்
பெறவாமே பேரின்பம் கேள்.

(9) மனக்காட்டைச் சீர்திருத்தி மாதவனே வைப்பான்
தனக்கோட்டை யன்றேநீ சாற்று.

(10) இருள்கடிந்து ஞானநமக் கேற்றுமருள் ஆழியான்
அருளேற்கப் பேரின்ப மாம்.

(11) வாதமுற வல்லோர்தம் வாயடக்கி வாழ்ந்தவனின்
போதவடி போற்றிப் புகழ்.

(12) எண்ணரிய தோத்திரங்கள் எம்பெருமான் மீதமைத்த
அண்ணலடி நெஞ்சே யடை.

(13) வேதக் கடல்கடைந்து வெண்ணெய் நமக்கீந்த
நாதன்சீர் நாவே நவில்.

(14) வடகலேயுந் தென்கலேயும் வாழ்ந்தோங்கு வாரிதியைத்
திடங்கொண்டு நெஞ்சமே சேர்.

(15) ஓரிரவி லாயிரம்பா ஒண்பாது கைக்குரைத்த
சீரதனே நெஞ்சமே செப்பு.

(16) மூவரையே தன்குலத்து மூத்தோராய் வந்தித்தோன்
சேவடியை நெஞ்சமே சேர்.

(17) மாணிடனுய்ப் பூவதனில் மாலருகே சேர்ந்தவோர்
கோனடியை நெஞ்சமே கொள்.

(18) வேந்தனுரை நீக்கி விடுதலேயே வேண்டிட்ட
சாந்தனது வாழ்வே சதிர்.

(19) அன்றூடம் பிச்சைகொண் டாராதித் தெம்பெருமான்
குன்றூ அருள்கொண்ட கோன்.

(20) வீட்டின் படியை விளக்கி வழிநமக்கே
காட்டும் கடவுளெனக் காண்.

ஸ்ரீ:

ஸித்தாந்த விவேசநம்

இப்பத்ரிகையின் ஆனி ஆடிமாஸ ஸஞ்சிகையில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட இரண்டு ஸந்தேஹங்களும், அவைகளைப்பற்றிச் சென்ற ஸஞ்சிகையில் வெளிவந்த ஸமாதாநங்களும், ஆஸ்திகர்களால் நன்றாய்க் கவனிக்கத்தக்கவை. அவைகளுள் பகவானுடைய மோஹநேச்சையைப்பற்றிச் சிறிது விஜ்ஞாபிக்க விரும்புகிறேன்.

ப்ரகரணாநுகுணமாக வாக்யார்த்தம் க்ரஹிக்கப்படவேண்டுமென்பது ஒரு ப்ரஸித்த ந்யாயம். இந்த ந்யாயத்தைப் புறக்கணிப்பதால் மேற்கண்ட ஸம்சயம் கிளம்புகிறதென்பது அடியேனுடைய தாழ்மையான விண்ணப்பம். ஒரு ஸாதாரண மனிதனைக் குறித்து 'அவன் மோஹந ப்ரவ்ருத்தன்' என்று வ்யவஹரித்தால், அவன் தன்னலத்திற்காக இதரர்களை மயக்கி வஞ்சிக்கக்கூடிய நிந்த்ய ஸ்வபாவமுடையவன் என்று அர்த்தம் கொள்கிறோம். 'மயக்கம் தருபவன்' என்னும் வார்த்தைகளையே ஒரு தகுந்த பிஷக் (டாக்டர்) விஷயமாய் ப்ரயோகித்தால், அவன் க்ளோரபாரம் முதலியவற்றைத் திட்டமாய்க் கொடுத்து அநேக வித ரணசிகித்ஸைக்கு அத்யாவஶ்யமான மயக்கத்தை ந்யூநாதிரிக்தமின்றி உண்டுபண்ணி, சிகித்ஸைக்கு உதவும் ஹிதபரன் என்று நினைக்கிறோம். இப்படியிருக்க "தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்யமதி தைவதம்" என்றும் "ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:" என்றும் சொல்லுகிறபடி, ஸத்வகுண ப்ரசுரர்க்கு மட்டுமேயல்லாமல், கேவல ராஜஸ தாமஸ ப்ரக்ருதிகளுக்கும் பிதாவாய், குடல்துடக்கே காரணமாய், அனைவரிடத்திலும் ஸௌஹார்த்த பரிபூர்ணனாய், அவர்களுடைய பேற்றுக்காகத் தான் எதிர்சூழல் புக்குத் திரியும் பகவான், சிலர் விஷயமாய் மோஹநத்தை அநுஷ்டிக்கிறானென்றால், அது அவர்களுடைய எதிர்கால ஹிதத்திற்காகவே செய்கிறான் என்று கொள்வதைத் தவிர வேறு வழியுண்டோ? மோஹநம் என்பதினால் மட்டும், அது கெட்ட எண்ணத்தினால் ஏற்படுகிறதென்றாவது கெட்ட நோக்கத்தையுடையதென்றாவது கொள்ள முடியாது. அது பரம பிஷக்கான பகவானால் ப்ரவர்த்திக்கப்படும்போது, அவனுடைய ஹிதஸ்ரோதோவ்ருத்தியினாலேயே செய்யப்படுகிறதென்றே கொள்ளவேண்டும்.

'ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் வாத்ஸல்யாதி ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனான பகவான் ஆபாததிலாவது துஷ்டமாய்த் தென்படும் மோஹநம் சிக்ஷை முதலிய ரீதிகளை அநுஸரிப்பானேன்? எல்லோரையும் காருண்ய மாருதாஹீதமான தன் குளிர்ந்த கடாக்ஷத்தாலேயே நல்வழிப்படுத்திப் பவ

ஸாகரத்தில் நின்றும் கரையேற்றலாகாதோ?’ என்றாற்போன்ற சில கேள்விகள் கிளப்பப்படலாம். இவைகளுக்கு நம்மாசார்யர்கள் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் முதலான சில ஸமாதாநங்களை அருளிச்செய்திருக்கிறார்கள். ஆனால் வாஸ்தவத்தில் அக்கேள்விகளுக்குப் பதில் சொல்ல கிஞ்சிஜ்ஞர்களாகிய நம்மால் ஆகாது. பகவானுடைய செயல்களுக்கு ஸமாதாநம் சொல்ல நாம் யார்? பகவானுடைய லீலை என்று சொல்லி முடிப்பதே ஶரணம்.

கீழ்ப்பாக்கம்,
சென்னை,
18—8—’45.

திவான்பஹதூர் வி. பாஷ்யம் ஐயங்கார்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கருடபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் திருநக்ஷத்ர

மஹோத்ஸவ வைபவம்

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி என்று புகழ்பெற்ற ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் ஸமீபத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினது எல்லோரும் அறிந்த விஷயமே. “குரூணாம் ஜந்மநக்ஷத்ரே வைஜயேத்” என்று ஆசார்யன் திருநக்ஷத்ரத்தன்று பகவத் பாகவதாராதநத்தைச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்கிற விதியை அநுஸரித்து, மேற்கண்ட ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் சென்ற ஆடிமீ 11-ம் தேதியன்று (26–7–’45) திவ்ய ப்ரபந்த வேதபாராயண இதிஹாஸ புராணாதி க்ரந்த பாராயணம் முதலியவற்றுடன் உபக்ரமிக்கப்பட்டு நான்கு நாள் பாராயணங்கள் அத்யாஶ்சர்யமாக நடந்தன. ஐந்தாவது நாளான ஆடிமீ 15௳ (30–7–’45) திங்கட்கிழமை ரேவதீ நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் சாற்றுமுறைகளும், பாராயணத்தில் அந்வயித்தவர்களுக்கு உசிதமான ஸம்பாவனைகளும், கோஷ்டி தக்ஷிணைகளும், பிறகு விசேஷ ததீயாராதநமும், ஸ்ரீமதுராந்தகம் என்கிற திவ்ய தேசத்தில் மிகவும் விமர்சையாயும் அத்யத்புதமாயும் நடந்தன.

இந்த ஸ்வாமி திருவடிகளில் அந்வயித்த சிஷ்ய கோடிகளில் ஒருவரான ஸ்ரீ. உ. வே. புதுச்சேரி துரைஸாமி ஐயங்கார் என்கிற தட்டை ராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமியின் பூர்வாஶ்ரமத்துத் திருமாளிகையிலேயே இம்மஹோத்ஸவத்தைச் சிறப்பாக நடப்பிக்கவேண்டும் என்று கருதி, முன்பாகவே ஸ்ரீமத் ஸ்வாமி திருவடிகளில் சில பேர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் த்ரவ்ய ஸஹாயம் செய்ய, அதை வைத்துக்கொண்டு, கருடபுரம் சின்ன ஸ்வாமி என்கிற ஸ்ரீ. உ. வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை முன்னிட்டு இம்மஹோத்ஸவத்தை மிகவும் சிறப்பாகவும் ஶ்ரத்தையுடனும் நடத்தி வைத்ததற்கு நாம் அவருக்கு நமது க்ருதஜ்ஞதையைத்

தெரிவிக்கின்றோம். ஸ்ரீமதஹோபில மடத்தின் வேத திவ்ய ப்ரபந்த பாடஶாலை உபாத்யாயர்கள் தங்கள் வித்யார்த்திகளுடன் இந்த ஐந்து நாளும் இம்மஹோத்ஸவத்தில் அந்வயித்து ஶ்ரத்தையுடன் பாராயணம் பண்ணினதற்கு அவர்களுக்கும் நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கின்றோம். பின்னும் ஸ்ரீமதஹோபிலமட சாஸ்த்ர பாடஶாலை உபாத்யாயர்களும் திருநக்ஷத்ரத்தன்று தங்கள் வித்யார்த்திகளுடன் எல்லோரும் வந்து கோஷ்டியில் அந்வயித்ததற்கு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீமத் ஸ்வாமி எழுந்தருளியிருக்கும்பொழுது ஸ்ரீமத் ஸ்வாமி ஸந்நிதியில் மாத்ரம் மேற்கூறிய மஹோத்ஸவம் நடக்கும். ஸ்ரீமத் ஸ்வாமி தன்னடிச்சோதிக்கு எழுந்தருளின பிறகோ, இவ்வர்ஷம் அநேக விடங்களில் இம்மாதிரி மஹோத்ஸவங்கள் பல நடந்தனவாகக் கேள்விப்படுகின்றோம். பெருமாள் கோயிலில் ஸ்ரீமத் ஸ்வாமி எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் கேதாண்டிபட்டு ஸ்வாமி ஆஶ்ரமத்திலும், திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ அடியவர்க்கு மெய்யனுடைய திருவடி வாரத்திலும், கல்யாணபுரம் அக்ரஹாரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியிலும் இம்மஹோத்ஸவம் சிறப்பாக நடந்ததென்றும் கேள்விப்படுகின்றோம். இம்மாதிரி ப்ரதி வருஷமும் இம்மஹோத்ஸவம், "𑌵𑌰𑍍𑌧𑌤𑌾𑌮𑌭𑌿 𑌵𑌰𑍍𑌧𑌤𑌾𑌮𑍍" என்று மிகவும் சிறப்பாக ஸர்வேஶ்வரன் நடப்பிக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

கருடபுரம். தி. ஈ. திருமலாசார்யன்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

"𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥"

ஸ்ரீமதுராந்தகம் ஶாஸ்த்ர பாடஶாலை.

ஸ்ரீமதுராந்தகத்தில் ஸ்ரீஅழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஶாஸ்த்ர பாடஶாலை ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹ விஶேஷத்தால் மேன் மேல் அபிவ்ருத்தமாய்க் கொண்டு வருகின்றது என்பதை நமது ஸுஹ்ருத்துக்களுக்கு நாம் ஸந்தோஷத்துடன் விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றோம். இரண்டு மூன்று வர்ஷங்களாக இந்தப் பாடஶாலையில் வித்யாக்ரஹணம் செய்துகொண்டுவந்த வித்யார்த்திகள், சென்ற சித்திரை மாஸத்தில் அதிகாரிகளால் நடத்தப்பெற்ற ராஜாங்கப் பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்தப் பாடஸாலையிலிருந்து ராஜாங்கப் பரீக்ஷைக்கு வித்யார்த்திகளை அனுப்புவதில் இந்தப் பாடஸாலைக்கு இதுதான் ப்ரதம ப்ரவ்ருத்தி. உத்தர ஸிரோமணி பாகத்திற்கு இரண்டு பெயர்கள் அர்ஹர்களாக இருந்தும், அவர்களுள் ஒருவரே பரீக்ஷையில் அந்வயிக்கும்படி ஸம்பவித்தது. அந்த ஒருவருக்கு அந்தப் பரீக்ஷையில் அர்த்தஸித்தி கிடைத்துவிட்டது. பூர்வ ஸிரோமணிக்கு ஏழு வித்யார்த்திகள் அனுப்பப்பட்டார்கள். அவர்களுள் இருவர் நீங்கலாக மற்றை ஐவரும் ஸித்தி பெற்றார்கள். ப்ரவேஸ பரீக்ஷைக்குப் போன ஐந்து பெயரும் நிஷ்பந்நரானார்கள். இம்மாதிரி நிஷ்பத்தி எல்லாருக்கும் மிக்க த்ருப்தியைக் கொடுத்தது. இந்த நிஷ்பத்திக்கு முக்ய காரணம் ப்ரவசந கர்த்தாக்களுடைய ஸ்ரத்தையும் பரிஸ்ரமமுமே; அவர்களுக்கு நமது அபிநந்தநத்தை இதன் மூலமாக நிவேதநம் செய்து கொள்ளுகிறோம்.

சென்ற ஒரு வர்ஷ காலமாக இந்தப் பாடஸாலையின் அத்யக்ஷ பதவியை வஹித்து வந்த இஞ்சிமேடு சேட்லூர் வித்வான் ஸ்ரீ. உப. ராகவாசார்ய ஸ்வாமி, தாம் பூர்வம் இருந்த திருப்பதிப் பாடஸாலையிலிருந்து ஒரு வர்ஷம் விராமம் பெற்று இவ்விடம் எழுந்தருளியிருந்தார். இப்பொழுது அந்த விராம காலம் பூர்த்தி அடையும் ஸமயம் ஸமீபிக்கவே, அவ்விடம் திரும்பிப் போகவேண்டும் என்னும் எண்ணம் மநஸ்ஸில் உதித்து, சென்ற ஆடி மாஸத்தின் ஆரம்பத்தில், அவர் ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநத்தைப் பெற்றுத் திருப்பதிக்குத் திரும்ப எழுந்தருளி விடும்படி ஸம்பவித்து விட்டது. அந்த ஸ்தாநத்திற்கு ஸம்பத்தங்களான பாடப்ரவசநம் பாடஸாலைப் பராமர்ஸம் ஆகிய இரண்டு அம்ஸங்களையும் ப்ருதக் ப்ருதக்காகப் பிரித்து, ப்ரவசநாம்ஸத்தின் நிர்வாஹத்திற்காக ஒரு புதிய பண்டிதரை உபாத்யாய வர்க்கத்திற் சேர்த்தும், மற்றோர் அம்ஸத்திற்காக, இதற்கு முன் அந்தப் பாடஸாலையில் ஒருவாறு அந்வயித்திருந்த எம். ஏ. எல். டி. பிருது பெற்றுள்ள கல்யாணபுரம் ஸ்ரீ. உப. டி. ராமஸ்வாமி ஐயங்கார் என்னும் ஒரு வித்வானை ஷ ஸ்ரீ. உப. சே. ராகவாசார்ய ஸ்தாநத்தில் அத்யக்ஷராக நியமித்தும், இவ்வாறு ஒரு வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த வ்யவஸ்தையால் பாடஸாலையின் கார்யங்கள் எவ்வித குறைவு மின்றிக்கே நடைபெற்று வருகின்றன. இப்பொழுது பாடஸாலையில் ஸிரோமணி கக்ஷியில் 22 வித்யார்த்திகளும், ப்ரவேஸ பாகத்தில் 21 பெயர்களும், ஆரம்ப கக்ஷியில் 16 பெயர்களும் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர்த்து 13 பெயர்கள் வேதாத்யயநத்திலும், 8 பெயர்கள் திவ்ய ப்ரபந்த பாகத்திலும் அந்வயித்திருக்கிறார்கள். ஆக மொத்தம் வித்யார்த்திகளின் ஸங்க்யை 80. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷத்தால் இந்தக் கைங்கர்யம் மேன்மேல் அபிவ்ருத்தமாகி, இந்தப் பாடஸாலை ஸீக்ரத்திலேயே இந்தப் பாரத நாட்டிற்குப் பெரியதொரு மூலபூதமான கலாஸாலையாகப் பரிணமிக்கவேண்டு மென்பது நம்முடைய ஹார்த்தமான ஆஸம்ஸை.

* * * *

சீர்திருத்தக்காரரும் நமது ஶாஸ்த்ரங்களும்

நமது தேஶம் முன்னேற்றம் பெற்றுத் தழைத்து ஓங்க வேண்டுமென்னும் உத்தேஶத்துடன் பல நிரூபகர்களால் பல உபாயங்கள் அடிக்கடி உபதேஶிக்கப்பட்டு வருவதை நமது ஸௌஹ்ருத்துக்கள் கவனித்திருக்கலாம். அந்த உபாயங்களுள் பின் குறிப்பிடப்படுவது ஒன்று. அதாவது:—பண்டைக் காலத்தில் நமது ருஷிகளால் விதிக்கப்பட்டு நம்மால் விஶ்வாஸத்துடன் அநுஷ்டிக்கப்பட்டுவரும் ஆசாரங்களெல்லாம், இந்தக் காலத்திற்குத் தக்கவாறு மாற்றப்படவேண்டும் என்பதே. நாம் வர்ண தர்மமென்றும் ஜாதி தர்மமென்றும் அநேக கட்டுப்பாடுகளைக் கைப்பற்றி வருகிறோமாம்; அது நமக்குள் ஒருவித த்வேஷத்தை உண்டுபண்ணி, நம்மை ஒன்றுக்கும் உதவாதவர்களாகச் செய்து விடுகிறதாம்; அக்கட்டுப்பாடுகள் அறவே ஒழிய வேண்டும் என்பது அவர்களுடைய வாதம். அவற்றை ஒழிப்பதற்கு ஜாதி வ்யத்யாஸமற எல்லாரும் போஜந ப்ரதிபோஜநம் வைத்துக் கொள்வதும், அந்த ஜாதி பேதத்தைக் கவனியாமல் விவாஹத்தைச் செய்து கொள்வதுமே தகுந்த வழியென்று அவர்கள் சொல்லி வருகிறார்கள். நமது ராஜதாநிக்கு ஒருகாலத்தில் முக்ய ராஜ்ய நிர்வாஹகராக இருந்த ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசார்யர் ஸமீப காலத்தில் ஸ்த்ரீகளின் வித்யாபிவ்ருத்தியைப்பற்றிப் பேசி வரும்பொழுதெல்லாம், ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக இந்த விஷயத்தை ப்ரஸ்தாவிக்கிறார். அவரைப் பின்பற்றி மற்றும் சிலர், ஸாந்த்வ புரஸ்ஸரமாக இதைக் கேவலம் உபதேஶத்தாலும் ஸ்வாநுஷ்டாநத்தாலும் வற்புறுத்துவது போதாதென்று நினைத்து, இந்தச் சீர்திருத்தத்தை ராஜாஜ்ஞையால் மாற்றவேண்டுமென்றும் உத்கோஷிக்கிறார்கள். அவர்களுடைய தாத்பர்யமென்னவென்றால்: ஜாதி தர்மத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களைக் குற்றவாளியென்று க்ரஹித்து, அவர்களை அந்தக் குற்றத்திற்காக ராஜ தண்டனைக்கு உள்ளாக்கவேண்டுமென்பதே. இந்த ஆலோசனை பரிஹஸிக்கத் தகுந்தது என்று நமக்கு இப்பொழுது தோன்றினாலும், கலி முற்ற முற்ற அதுவே புத்திமத் க்ருத்யமென்றும், அம்மாதிரி ஒரு சட்டம் ஜகத்தின் க்ஷேமத்திற்கு அவஶ்யம் வேண்டுமென்றும் நினைக்கும்படியான காலம் வந்துவிடலாமென்றே நமக்குத் தோன்றுகிறது. எதுதான் வந்தது? நாம் என்ன செய்யலாம்?

நிற்க: ஸ்ரீமான் ராஜகோபாலாசார்யர் தாம் செய்த உபந்யாஸங்களில் தமது கொள்கைக்கு ப்ரமாணமாக ஸ்ரீபகவத் கீதையில் வாக்யங்கள் இருக்கின்றனவென்று சொன்னாராம். அவர் அப்படிச் சொல்லியிருப்பரோ என்று நமக்கு ஸந்தேஹம் ஜநிக்கின்றது. படிப்பினாலும் பழக்கத்தாலும் அவருடைய புத்தி சிறந்த ஸம்ஸ்காரம் பெற்றிருக்கின்றது. அப்படிப்பட்டவர், ஒரு க்ரந்தத்தின் மொத்த கருத்தைத் தவறாக க்ரஹித்திருப்பாரென்று நினைக்க ஹேது வில்லை. அப்படி அவர் பேசியிருந்தால், ஆக்ரஹத்தால் அவருடைய புத்தி

கலக்கத்தை அடைந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். பகவத்கீதை வர்ண பேதத்தையும் ஜாதி பேதத்தையும் கண்டிக்கிறதென்று சொல்வது, காகத்தை வெளுப்பென்று ஸித்தாந்திப்பதற்கு ஒக்குமன்றோ ?

தவிர : ஶாஸ்த்ரார்த்தங்களைத் தக்க முறையில் தெரிந்து கொள்ளாதவர்கள் எதற்காக ஶாஸ்த்ரத்தை இழுத்து அதைப் பரிபவப்படுத்துகிறார்களென்பது நமக்கு விளங்கவில்லை. ஶாஸ்த்ரத்தை மீறி நடப்பவர்கள் தங்கள் இஷ்டப்படி தமது நடை உடை பாவனைகளைச் சீர்திருத்தம் செய்துகொள்வதில் நமக்கு எவ்வித ஆக்ஷேபமும் இல்லை; அவர்கள் இனியேனும் வீணில் அந்த ஶாஸ்த்ரங்களை வலுவில் இழுத்து அவைகளைத் துராக்ரமம் செய்யாமல் இருக்கவேண்டுமென்று மாத்ரம் நாம் அவர்களைப் பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.

* * *

யுத்தத்தின் முடிவு

ஜப்பான் யுத்தமும் முடிந்துவிட்டதாம். சென்ற ஆறு வர்ஷங்களாக ஜகத்தில் மஹத்தான க்ஷோபத்தை ஜநிப்பித்து வந்த இந்த யுத்தங்கள், இப்பொழுது ஸ்ரீஶரண்யனுடைய க்ருபையால் முடிந்துவிட்டன என்னும் வ்ருத்தாந்தத்தைக்கேட்டு நாம் மிக்க ஆஶ்வாஸத்தை அடைகின்றோம். இந்த யுத்தங்களால் ஜநங்கள் எவ்வளவு துயரங்களை அநுபவித்திருக்கிறார்கள் என்பது சொல்ல முடியாது. மேன்மேல் அபிவ்ருத்தி யடைந்து கொண்டு வந்த ஶாஸ்த்ரப் பயிற்சிகளெல்லாம் தடைபட்டு நின்றுவிட்டன என்பது மாத்ரமின்றிக்கே, அவை வெகுதூரம் பின் வாங்கிவிட்டன வென்றும் சொல்ல வேண்டும். ஶில்ப ஶாஸ்த்ரங்களில் தேர்ச்சி பெற்ற அநேக நிபுணர்கள் மடிந்து விட்டனர். அநேக தேஶங்களில் வித்யாப்யாஸம் சரியானபடி செய்விக்கப்படாமல், பாலர்கள் மூடர்களாக நிற்கும்படி ஸம்பவித்துவிட்டது. இஷ்டர்களையும் பந்துக்களையும் அகாலத்தில் இழந்து ஜநங்கள் படும் பரிதாபம் ஒரு பக்கத்தில் நிற்க, உயர்ந்த ஶக்தியையும் ஜ்ஞாநத்தையும் பெற்று அதனால் ஜகத்திற்குப் பெரிய உபகாரங்களைச் செய்யப்போகிறார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட அநேக பெரியோர்களுள் பலர் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்கள். அளவற்ற ஜநங்களும் த்ரவ்யங்களும் நாஶமாகிவிட்டன. எல்லாம் பகவானுடைய செயலென்றும், அதை அநுபவித்தே தீரவேண்டுமென்றும், பௌருஷ மற்றவர்களுக்குத் தேறுதலைக் கொடுக்கும் வேதாந்தத்தைக் கைப்பற்றி நாமும் ஆறுதலை அடைகின்றோம்.

இப்பொழுது அநேக பெரியோர்கள் ஒன்று சேர்ந்து, இனி இம்மாதிரி யுத்தம் மறுபடியும் வாராமல் இருப்பதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடப் போவதாக நாம் கேள்விப்படுகிறோம். இதைக் கேட்ட நமக்கு, ஸ்ரீவில்லியார் சொல்லியுள்ள ஒரு விநோதப் பாசுரம் ஸ்மரணத்திற்கு விஷயமாகின்றது. ஸ்ரீக்ருஷ்ணன் துர்யோதநனிடம் தூதனுகப் போகும் தருணத்தில், அவன் பாண்டவர்கள் ஐவரையும் ஆலோசனை கேட்கிறான். அவர்கள் தனித்தனியாகத்

தம்தம் அபிப்ராயத்தை வெளியிடுகிறார்கள். ஸஹதேவனை ஸந்தித்தபொழுது, அவன் தனது பரிஹாஸ ஸ்வபாவத்தை வெளியிட்டுக்கொண்டு, 'ஸஹதேவ! இந்தப் பாரத யுத்தம் வாராமல் தடுப்பதற்கு ஏதாவது உபாயம் உண்டோ?' என்று ப்ரஸ்நம் பண்ண, ஸஹதேவன் அந்த விநோதத்திற்குத் தக்கவாறு, வேறு சில விஷயங்களைச் சொல்லிக் கடைசியாக, 'உன்னைப் பிடித்துக் கட்டி விட்டால் மா பாரதப் போர் வாராமற் காக்கலாம்' என்று பதில் சொன்னதாக அந்த மஹா காவ்யத்தில் காண்கிறோம். அம்மாதிரி இப்பொழுது யாரைப் பந்தித்துவிட்டால் இனி மறுபடியும் யுத்தம் வாராமற் காக்கலா மென்பது நமக்குப் புலப்படவில்லை. விநோத வார்த்தைகளை ஒதுக்கி உண்மையை வெளியிடுவதானால், இப்பொழுது தூணிலிட்டுப் பந்திப்பதற்கு இரண்டு மஹா பாபிகள் இருக்கிறார்களென்று நாம் சொல்லக்கூடும். அவர்கள் யாரென்றால், நம்முடன் பிறந்தவர்களான காமமும் க்ரோதமுமே. அக்காம க்ரோதங்களே நமது மனஸ்ஸில் துர்நிக்ரஹமான கலக்கத்தை உண்டுபண்ணி, அதன் அவலம்பத்தைக்கொண்டு நமக்கு இயற்கையாயுள்ள விவேகத்தை நசிப்பித்து, நம்மை இம்மாதிரியான கோர வ்யாபாரங்களில் மூட்டுகின்றன வன்றோ? அந்தப் பாபிகளைச் சிறையிலிட்டால் யுத்தம் என்பது எப்படி நேரும்? ஆனால் அதற்குத் தேவையான உபாயங்களை இப்பொழுது இந்த ஸங்கத்திற் சேரப்போகும் பெரியோர்கள் தேடப் ப்ரயத்நப்படுவார்களோ? ஶாந்தியும் ஸமாதானமும் நமது மனஸ்ஸில் புகாமல் இருக்கும் வரையில், நாம் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக் கொண்டே அழகான இந்தப் பூமியைப் பாழாக்கி விடுவோ மென்பதில் ஆக்ஷேப மில்லை. தைவமே கதி.

புதிய அணு குண்டு.

'அணு குண்டு' என்று ஒரு புதிய வெடிகுண்டாம். அதைக்கொண்டு ஒரு க்ஷணத்தில் லக்ஷம் ஜநத்தை நாசமாக்கி விடலாமாம். இது பாஸ்சாத்ய கலா நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறதாக நாம் அறிகின்றோம். இதன் பரிமாணம் கோழிமுட்டை அளவுள்ளதாம். இதை ஒரு விமாநத்தி லிருந்துகொண்டு பூமியின் மீது போட்டால், அது பூமியிலிருந்து சற்றேறக்குறைய நூற்றைம்பது அடி உயரத்தில் வரும்பொழுது வெடித்து, அதிலிருந்து ஆயிரம் ஸூர்யன் உதித்தாற்போல் ஜ்யோதிஸ் ஒன்று கிளம்புகிறதாம். அந்த ஜ்யோதிஸ்ஸுடன் அத்யுஷ்ணமான கிரணங்கள் கிளம்பி நாலு பக்கமும் பரவி, அவைகளின் மார்க்கத்திலுள்ள பதார்த்தங்களெல்லாவற்றையும் எரித்துப் பஸ்மமாக்கி விடுகின்றனவாம். அந்த உஷ்ணம் அந்தக் குண்டு விழுமிடத்திலிருந்து 10 மயில் தூரம்வரை சென்று, பூமியிலுள்ள வீடு வாசல் அங்குள்ள ஜந்துக்களெல்லாவற்றையும் நாசமாக்கி விடுகின்றதென்றும் சொல்லுகிறார்கள். அந்த வெளிச்சத்தைப் பார்க்குமவர்களின் கண்கள் பாழடைந்து விடுவதுடன், அந்தக் குண்டு வெடிப்பதனால் உண்டாகும் அதிர்ச்சியும், அதனால் உண்டாகும் பெருங் காற்றும், மலையையும் புரட்டி விடுவதுபோல் இருக்கின்றனவாம். முற்காலத்தில் ப்ரஹ்மாஸ்த்ர மென்று என்று ஒரு உக்ரமான அஸ்த்ர முண்டென்றும், அதை ப்ரயோகம் செய்தால் ஜகத் முழுவதையும் நாசமாக்கி

விடலா மென்றும் முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அது மந்த்ர விஸேஷத்தின் பரிணாம மென்று அவ்விடங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வித மந்த்ர மொன்று மின்றிக்கே, இந்தக் குண்டு அதைக்காட்டிலும் மிக க்ரூரமான த்வம்ஸத்தைச் செய்கிற தென்பதைக் கேட்க மிக்க அச்சமும் ஆஸ்சர்யமும் ஜநிக்கின்றன. இந்த ஆய்தம் ஒன்று கையிலிருந்தால் ஜகத் முழுவதையும் ஸ்வாதீநமாகச் செய்து கொள்வதற்கோ அல்லது சாம்பலாக்கு வதற்கோ அது போதுமான கருவியாகும் என்பதில் ஆக்ஷேபம் ஏது? அழகான இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தவன், அது இப்படி நாஸமாகப் போகட்டு மென்று இந்த குண்டையும் ஸ்ருஷ்டித்தான்? இது என்ன ஆஸ்சர்யம்?

இந்த வெடிகுண்டை அமெரிக்கா தேஸத்துப் பௌதிக ஸாஸ்த்ரஜ்ஞர் கள் கண்டுபிடித்திருக்கிறார்களாம். அவர்களுக்கு மாத்ரம் அதன் ரஹஸ்யம் தெரியுமாம். ஸமீபத்தில் நடந்த ஜப்பான் யுத்தத்தில், கடைசியாக இந்த ஆய்தத்தை ஜப்பான் தேஸத்துமீது அமெரிக்கர்கள் ப்ரயோகம் செய்தார் களாம். ஒரு நாள் ஒரு குண்டு போட்டு, அதனால் ஒரு பட்டணத்தையும் அதைச் சுற்றியிருந்த க்ராமங்களெல்லாவற்றையும் பஸ்மமாக்கி விட்டார்களாம். இரண்டு திநம் சென்ற பிறகு, மற்றொரு பெரிய பட்டணத்தின்மீது ப்ரயோகம் செய்ததன் பயனாக அந்தப் பட்டணத்தில் பெரும்பாகம் நாஸமாய்ப் போன துடன், அதற்கு ஸமீபத்திலிருந்த ஜநங்களும் ஜந்துக்களும் பாதி எரிந்த தேஹங்களுடன் இரண்டு மூன்று திநங்கள் கஷ்டப்பட்டு ஒருவரொருவராக மரித்தார்களாம். ஜப்பான் ராஜாங்கத்தார் வெளியிட்டிருக்கும் கணக்குப்படி, இந்த இரண்டு குண்டுகளால் அநேக லக்ஷம் ஜநங்கள் நாஸமாகி விட்டதாகத் தெரிகின்றது. இப்படி ஜநங்கள் மடிவதையும் இதைத் தடுப்பதற்குத் தமக்கு ஸக்தி யிராமல் இருப்பதையும் பார்த்து ஜப்பான் ராஜாங்கத்தார், இவ்விதமான ஜந நாஸத்தை விளைவிக்கும் யுத்தத்தை நீடித்து நிற்க விடுவது பிசகு என்று அறிந்து அமெரிக்கரிடம் ஸரணாகதி செய்து விட்டதாக நாம் அறிகின்றோம்.

யுத்தத்தில் ப்ரவர்த்திக்கும் யுத்த வீரர்களுக்கு மாத்ர மின்றிக்கே யுத்தத்தைப்பற்றி ஒன்றையும் அறியாமலிருக்கும் ஸாது ஜநங்களுக்கு பெருத்த நாஸத்தை விளைவிக்கக்கூடிய ஆய்தங்களை ப்ரயோகம் செய்து யுத்தத்தை நடத்துவது தர்ம யுத்தமாகுமா என்பதைப் பல பெரியோர்கள் விசாரித்து வருகிறார்கள். அவர்களுள் அநேகம் பெயர்கள் அதை அதர்ம மென்றே நிர்ணயிக்கிறார்கள். இந்நாளில் தர்மாதர்ம விசாரம் எதற்கு ப்ரயோஜநம்? ப்ரயோஜநம் இருந்தாலும் யார் சொல்வதை யார் கேட்கப் போகிறார்கள்? இந்தப் பூமி, ஸாது ஜநங்கள் வஸிக்க யோக்யமற்ற தாகப்போய் விட்டதென்றே சொல்லவேண்டும். எல்லாம் பகவானுடைய ஸங் கல்பம். "क इत्था वेद यत्र सः"

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

42-ம் பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸ்ரீ ஸங்கல்ப மஹோத்ஸவம்.

[கத்தவாலில் நடந்த வைபவம்]

ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், 24—7—45 செவ்வாய்க்கிழமை காலே 10-மணிக்குக் கத்தவால் ஸம்ஸ்தாநத்திற்கு எழுந்தருளியாயிற்று. அப்போது கத்தவால் ராணியார் யானே ஸேனை முதலிய பரிவாரங்களுடனும் 200-துருப்புக்களுடனும் சத்ர சாமராதி ஸமஸ்த ராஜ மர்யாதைகளுடனும் ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்கொண்டுவந்து உபசரித்தார். ப்ராம்ஹ ...த்தமர்கள் பூர்ண கும்பங்கள் ஏந்தி ஸ்வஸ்தி வாசந கோஷத்துடன் எதிர்கொண்டு ...வேற்றனர். திவான் பகதூர் ஆனரபிள் எக்ஸிக்யுடிவ் கௌன்ஸில் மெம்பரான ...மான் M. B. E. ஆராவமுதையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை ...விப்பதற்காக அன்றை தினம் அங்கு வந்து, ஸ்ரீ அழகிய சிங்கர் பல்லக்குடன் அஹோபில மடம் வரையில் அநுயாத்ரையாகச் சென்றார். மர்யாதைக்கு அறிகுறி...க 11-குண்டுகள் அந்த ஸமயம் போடப்பட்டன. மறுநாள் ஸ்ரீ அழகிய சிங்கர் ...நத் ஸங்க்ரஹணம் செய்துகொண்டு சாதுர்மாஸ்ய ஸங்கல்ப வ்ரதம் பண்ணிக் ...காண்டு திருமுடி விளக்கம் ஆனபிறகு, முதல் தினம்போல் ஸமஸ்த ராஜ மர்யாதைகளு...ன் ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளியாயிற்று. மஹாராணியாரும், மற்றும் ராஜபந்துக்களும், ஸ்ரீ ஆராவமுதையங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ ஸங்கல்ப மஹோத்ஸவத்தை விசேஷமாக ஸந்நிஹிதர்களாக இருந்து நடத்தி வைத்தனர். பல திவ்ய தேசங்களிலிருந்து விசேஷமாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸேவை ஸாதித்தனர். அன்று ராத்ரி அநேக திவ்ய தேசத்து எம்பெருமான்களுடைய மர்யாதைகளும் ஸம்ஸ்தாநத்தினுடைய மர்யாதைகளும் ஸ்ரீ அழகிய சிங்கரால் ஸ்வீகரிக்கப்பட்டன. அச்சமயம், இந்த ஸம்ஸ்தாநத்தில் தர்மாதிகாரியாய் நைஜாம் தேசத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ கார்யமாக நியமிக்கப்பட்ட சிலுக்கூர் வெங்கடராகவதாஸனால் ஸம்ஸ்க்ருத பாஷையில் ஸ்ரீ அழகிய சிங்கர்க்கு ஒரு ஸ்வாகத பத்ரம் வாசித்து ஸமர்ப்பிக்கப்பட்டது. பிறகு ப்ரஸாத தாம்பூலாதிகள் விநியோகம் செய்யப்பட்டன. கடைசியாக ஸ்ரீ அழகிய சிங்கர் அங்கு வந்திருந்த யாவர்க்கும் மந்த்ராக்ஷதை அநுக்ரஹித்தாயிற்று. —சிலுக்கூர் மா. வெங்கடராகவ தாஸன்

(2)

ஸ்ரீ சிறுங்கட்டூர் ஸ்வாமியின் பாரத விமர்சம்

சிறுங்கட்டூர், நடாதூர், வித்வான் ஸ்ரீ S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி என்பவரை ...வைஷ்ணவர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள். இவர் ஸம்ரக்ஷிணீ ஸ்ரீ ந்ருஸிம்ஹ...யா முதலிய பத்ரிகைகளில் பல அழகான வியாஸங்களை எழுதி வருகிறார். இப்பொ...து சுமார் நான்கைந்து மாத காலமாக "அம்ருதலஹரி" எனும் தமிழ்ப் பத்திரிகை...ல் "இதிஹாஸ விமர்சம்" என்னும் தலைப்பின்கீழ் மஹா பாரதத்தைப் பற்றிச் சில ...ர்வ விஷயங்களை எழுதிக்கொண்டு வருகிறார். "மஹா பாரதம் யாரால் இயற்றப்பட்...டீ? இது எவ்வளவு ஸ்லோகங்கள் கொண்டது? இப்போது ப்ரசாரத்தில் காணப்படும் ...பாரத புத்தகங்களின் அமைப்பு, அவைகளில் ஒன்றுக்கொன்று காணப்படும் முரண்...கள், எதுமுதல் எதுவரையாக உள்ள பாகத்திற்கு மஹா பாரதம் எனப் பெயர்? ...த் ராமாயணத்திற் குண்டான கௌரவம் இதற்கு உண்டா? என்ற பல விஷயங்களை ...நக யுக்திகளைக் கொண்டு எளிய நடையில் அனைவரும் அறியுமாறு எடுத்துரைத்...ப்பது மிகவும்போற்றத்தக்கதாகும். இதை ஆஸ்திகர்கள் அனைவரும் படித்து ஆனந்...பார்களென நம்புகிறேன். —காஞ்சீபுரம் வ. ஸ்ரீநிவாஸாசாரியார், சிரோமணி

(5)

ஸ்ரீ அஹோபில மடம் 42-வது ஆஸ்தாநத்தில் ஸ்ரீமதித்யாதி ஸகல பிருதலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன், தாம் பட்டத்திற்கு எழுந்தருளின ஸமயம் தர்ம ஸ்தாபநத்திற்காகச் செய்த நியமநங்களாவன:—(1) ப்ரதி வர்ஷம் மாலோல ஸபை கூட்டி வித்வத் ஸதஸ் நடத்துவது, (2) வேதாத்யயந பாடசாலை ஏற்படுத்துவது, (3) சாஸ்த்ர பாடசாலை நடத்துவது. (4) ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை என்னும் பத்ரிகை நடத்துவது, (5) பண்டிதர்களைக் கொண்டு மத ஸம்பந்த உ[illegible]ந்யாஸங்களைச் செய்விபபது. இவைகளுள் முதல் நான்கு, மூன்று வர்ஷ காலமாக நடந்[illegible]ருகின்றன. ஐந்தாவதாகிற உபந்யாஸங்களை ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தாந

Regd. No. M: 4437

வித்வானுகிற ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி அப்பொழுஸதக் கப்பொழுது பற்பல விடங்களில் நடத்தி வருகிறார். சென்ற ஆடிமாஸம் 10உ முதல் ஐந்து திநங்கள் ஸ்ரீரங்கம் கீழ் உள் தெரு வீதியிலிருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ பகவத் கீதை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தருளினார். மறுபடியும் இப்பொழுது ப்ரதி வாரமும் இரண்டு உபந்யாஸங்கள் நடைபெற்று வருகின்றன. மஹா ஜனங்கள் அவைகளை ஶ்ரத்தையுடன் கேட்டு ஆநந்திக்கிறார்கள்.

பார்த்திவஸு ஆவணிமீ 12.

எம. பி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.

(4)

2/10/40

॥ शबरीपद्याष्टकम् ॥

[வித்வாநபாகு, ஸ்ரீ உப. ராகவாசாரியர்]

फलं कृत्स्नं यत्रायतत इतरेषामभिमतं
स विश्वेशस्साक्षाद् दशरथसुतीभूय दयया ।
त्वदुद्देशं प्राप्तः कतिपयफलान्यादित यदि
प्रभावस्येयत्तां ननु शबरि ! के वा तव विदुः ॥ १

उपायोऽन्यो लोके फलमपि तथा भिन्नमनयो-
रभेदो नो सिध्येदिति खलु नयज्ञव्यवसितिः ।
त्वयेयं नादृत्या किमु शबरि सत्पद्धतिजुषा
फलैरेवोपायै रघुवरसपर्यां यदकृथाः ॥ २

दिवं याते सद्यः शबरि ! भवदाचार्यनिवहे
तदादेशात् सीताकमनमतिथीकृत्य भवती ।
यदा प्राप्तानन्दाजनि जनिमदुज्जीवनपरा
तदैवा "त्रब्रह्म" श्रुतिरपि कृतार्थेति मम धीः ॥ ३

इयं वेदिः पूजाकुसुममिदमग्लानि भगवन् !
गुरूणां मे चिन्तासममुपगतोऽयं जलनिधिः ।
त्वयैवं निर्दिष्टे श्रमणि ! विभवे त्वद्गुरुतते-
र्निजादेशत्राणान्ननु रघुपतिर्भूरि मुमुदे ॥ ४

जुहाव स्वात्मानं त्वमिव शरभङ्गो धुरि हरे-
स्तथाप्युच्चैर्भासि क्रमकलितमुक्तेर्मुनिवरात् ।
परानन्दास्वादत्वरितमतिरारुह्य रुचिरं
विमानं संहृष्टा सपदि परमं धाम यदगाः ॥ ५

त्वदाचार्या यत्र त्वमपि तदुपेता हरिपदं
तव त्वेतद्भाग्यं शबरि ! जयति स्फीतविभवम् ।
परे धाम्नि ब्रह्मानुभवसमतायामपि यतो
महानानन्दस्ते विभवतनुसेवाविकसितः ॥ ६

சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்

1945-வர்ஷம் தொடங்கி எட்டு மாஸங்கள் ஆய்விட்டன. வர்ஷம் பிறந்து நாலு மாஸ தவணைக்குள்ளேயே அவ்வர்ஷத்தின் சந்தாத் தொகையை அனுபபி உதவவேண்டுமென்று பண்டு பல தடவைகளில் ப்ரார்த்தித்திருந்தும், பலர் இன்னும் தமது சந்தாப் பணத்தைச் செலுத்தாதிருக்கின்றனர். அந்தந்த வர்ஷத்துச் சந்தாப் பணம் அந்தந்த வர்ஷத்தில் செலுத்தப்பட்டு விடுதல் இருதிறத்தார்க்கும் அநுகூலமென்பது வெளிப்படை. ஆகவே, இனி அவர்கள் இன்னும் இரண்டு மாஸத்திற்குள்ளேனும் க்ருபை பண்ணித் தமது சந்தாத் தொகையை அனுப்பி உதவ வேண்டுமென்று மீண்டும் ஞாபகப்படுத்தப்படுகிறார்கள். தவிர: பணம் அனுப்பும் சந்தாதாரர்கள், தாங்கள் பணம் அனுப்பும்போது, தங்கள் சந்தா நம்பரையும் மணியார்டர் கூபனில் தயைசெய்து குறித்[illegible]ப்பின் நலம்.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Che[illegible] Street. [illegible]as
Edited & Published by S. Vasudevachariar, 5. Ramaswami Street, Tyagarayar[illegible]ras